பூந்தளிர் அமர் சித்திரக்கதை

No. 23

மகாபாரதம்-2



COMICS PDF TIMES



மன்னனே கேள்! பரத வம்ச-
த்து சந்தனுவுக்கு சத்யவதி
மூலம் இரண்டு பிள்ளைகள்
பிறந்தன. இவர்கள் சித்ராங்-
கதன், விசித்ர வீரன் என்ற-
ழைக்கப்பட்டனர்.
சந்தனுவின் மறைவுக்குப்-
பிறகு, பீஷ்மர் அஸ்தினபுரத்-
தின் அரசனாக சித்ராங்கத-
னுக்கு முடி சூட்டினர். பூவுல-
கையும் வேறு உலகங்களை
யும் வென்று கொண்டு
தன்னிகரில்லா ஆட்சி
புரிந்தான் சித்ராங்கதன்.
சித்ராங்கதனின் ஆதிபத்தியத்தில் எரிச்ச-
லுற்ற அதே பெயருடைய ஒருவனை குரு-
க்ஷேத்திரத்தில் வாட்போருக்கு அழைத்தான்.
மூன்று ஆண்டுகள் நடந்த போரில்
கடும் போரில் சித்ராங்கதன்
கொல்லப்பட, கந்தர்வன் தேவலோ-
கம் திரும்பினன்.


சிறுவனான விசித்ர வீர்யனுக்கு முடி
சூட்டப்பட்டது. வீரமும் நல்லொழுக்-
கமும் மிக்க பீஷ்மரின் ஆலோசனைப்
படி தன் மூதாதையரின் ராஜ்யத்தை
ஆளலானான் விசித்ரவீர்யன்
விசித்திர வீர்யன் திருமண வய-
தடைந்தான். கண்காணிப்பா-
ளரான பீஷ்மர், காசிராஜாவின்
மூன்று பெண்களும் ஸ்வயம்-
வரம் மூலம் தங்கள் கணவன்
மார்களைத் தேர்ந்தெடுக்கப்
போவதை அறிந்தார்.
மகாவீரரும் விசுவாச-
முள்ள ராஜப் பிரதிநிதியு-
மான பீஷ்மர் சத்யவதி-
யின் அனுமதியுடன்
தனியொரு தேரில் காசிக்-
குக் கிளம்பினார்.


அங்கு, அந்த மூன்று ராஜகுமாரிகளையும், சுயம்வரத்துக்கு வந்திருந்த பல மன்னர்களையும் கண்டார். காசி ராஜனையும், குழுமியுள்ள அரசர்களையும் பார்த்துக் கம்பீரமான குரலில் கூறினார்.
ஒரு கன்னியை பர்சுப் பொருள்களுடன் தகுந்த ஆண்மகனுக்குத் தானமாகக் கொடுப்பார்கள் அல்லது சில பசுக்களையும் பொன்னையும் பெற்றுக் கொண்டு பெண்ணைக் கொடுப்பார்கள்.
சிலர் கன்னிகளை பலாத்காரமாகத் தூக்கிப் போவார்கள். சிலர் அவள் அனுமதியோடு மணப்பார்கள். கன்னிகளின் விருப்பப்படியான திருமணமே சிறந்தது. ஆனால்...
போட்டியிடுபவர்களிடமிருந்து கவர்ந்து செல்லப்படும் பெண்ணே மதிப்புமிக்க மனைவியாவாள்.

வல்லமை மிக்க பீஷ்மர் மூன்று கன்னிகைகளை தம் ரதத்தில் ஏற்றிக் கொண்டு மன்னர்களிடம் சூளுரைத்தார்.
என் சகோதரனுக்காக இரு கன்னிகைகளை நான் பலவந்தமாகக் கொண்டு போகிறேன்.
வல்லவர்களே! வாருங்கள். உங்கள் வீரத்தைக் காட்டி முடியுமானால் என்னைத் தடுத்து நிறுத்துங்கள்.

பீஷ்மரின் சாதுர்யமான இச்செயலினால் மன்னர்களெல்லாம் ஒன்று சேர்ந்து போரிடத் தயாரானார்கள்.


விநாடியும் வீணாக்காமல், அரசர்கள் தங்கள் திருமண ஆடம்பரங்களை உதறி விட்டு ஆயுதங்களை நாடினார்கள், ஆபரணங்களின் மினுமினுப்பும் ஆயுதங்களின் பளபளப்பும் அவை உராய்தலினால் உண்டான கலகலப்பும் அந்தப் பிராந்தியத்தையே உலுக்கியது.







COMICS PDF TIMES



உக்கிரமான போர். ஆயுத-
ங்களின் மோதல், அம்பு-
களின் வேகம் - பார்ப்பவர்
நெஞ்சம் கலங்கும்படி
இருந்தது அந்தச்
சண்டை.
விரைவில் யுத்த பூமி,
வெட்டப்பட்ட தலைகளா-
லும், தேரின் கொடிக்
கம்பங்களாலும், கவ-
சங்களாலும் மூடப்-
பட்டது.
போரிடுவதற்கு வந்த
விரோதியே வியக்கும்-
படியான பராக்கிரம்
பீஷ்மருடையது.



COMICS PDF TIMES


போர்க்களத்தில் இரக்கமற்றவரானாலும்
விசித்ரவீர்யனுக்காகக் கொண்டு
வந்த கன்னிகைகளிடம் கருணை-
யுடன் நடந்து கொண்டார் பீஷ்மர்.
திருமண ஏற்பாடு முடிந்து சத்யவதியால் அங்கீகரிக்கப்பட்டதும், கன்னிகை
களில் மூத்தவளான அம்பா, பீஷ்மரிடம் கூறினாள்:
ஸ்வயம்வரத்துக்கு முன்பே நான் சாபா நாட்டு மன்னனை வரித்து விட்டேன். அவரும் ஒப்புக் கொண்டு தந்தையும் சம்மதி-த்து விட்டார்.
இதை நீங்கள் தெரிந்து கொள்-ளச் செய்து விட்டேன். உங்கள் விருப்பம்போல் செய்யவும்
புத்திமானும் நன்னடத்தையு முள்ள பீஷ்மர் அம்பாவுக்கு அவள் விருப்பப்படி நடந்து கொள்ள அனுமதித்து, அம்பிகா வையும் அம்பாலிகாவையும் தன் சகோதரன் விசித்ர வீர்யனுக்கு மணமுடித்து வைத்தார்.



COMICS PDF TIMES

உன்னிடம் ஒரு பொறுப்பை ஒப்படைக்கிறேன்.
இந்த காசிராஜாவின் இளவரசிகளுக்குக் குழந்தைகளாகக் கொடுத்து சந்தனுவின் வம்சம் செழிக்கச் செய்.
அரியணையில் அமர்ந்து இந்த நாட்டை ஆண்டு வா.
இதைக்கேட்ட பீஷ்மர் கூறினார்.
என்னால் தந்தையாகவோ, இத்தரணியை ஆளவோ முடியாது. என் சபதம் யாவரும் அறிந்ததே.
சத்யவதி கூறினாள்
என் பொருட்டான அந்த சபதத்தை நான் அறிவேன். ஆனால் இப்படி ஒரு துயரத்தை எதிர்பார்க்கவில்லையே!
உன் சபதத்தில் நீ உறுதியாக இருந்தால் உன் முன்னோர்களுக்கு முக்தி கிடைக்காது.

சத்யவதி துயர மிகுதியால் கூறிய வார்த்தைகளைக் கேட்ட பீஷ்மர் கூறினார்.
சபதத்தை மீறுவதை சாஸ்திரங்கள் ஏற்கவில்லை. ஆனாலும் க்ஷத்திரியர்களுக்கான ஒரு பரம்பரைப் பழக்கம் அனுமதிக்கப் பட்டிருக்கிறது.
நற்பண்புகளுள்ள ஒருவரை அழைத்து அவர்மூலம் விசித்ர வீர்யனின் மனைவிகளை குழந்தை பெறச் செய்யலாம்.
சத்யவதி கூச்சமுடன் சிரித்துக் கூறினாள்.
ராஜகுமாரா! நம் சந்ததியில் நீ பண்பாளன், சத்தியவான். எங்களுக்குப் பாதுகாப்பு நீயே. ஆகவே என் கதையைக் கேள். பிறகு எது சரியோ அதைச் செய்.
சத்யவதி தான் கன்னியாயிருக்கையில் பராசர முனிவரைச் சந்தித்து அவர்மூலம், என்குரு தேவரான கிருஷ்ணத்வைபாயனரை மகனாக அடைந்ததை பீஷ்மரிடம் தனிமையில் கூறினார்.



அவர்கள் அவனை இந்திரன், மித்ரன், வருணன், அக்னி என்றழைத்தார்கள்.
ஓர் உண்மைக்கு முனிவர்கள் பல பெயர்களிட்டார்கள்.

COMICS PDF TIMES


நீண்ட காலத்துக்குப் பின் தன் மகனைக் கண்ட சத்யவதி கண்ணீர் உகுத்தாள். அவள் முகத்தை மகன் அவள் கண்களைத் துடைத்துக் கூறினார்
அம்மா, உங்கள் விருப்பத்தைக் கூறுங்கள், நிறைவேற்றுகிறேன்.
வியாசரை அமரச் சொல்லி சத்யவதி கூறினாள்.
பீஷ்மனுடைய வேண்டுகோளும் என்னுடைய விருப்பமும் இது தான்.
பீஷ்மனைப் போலவே விசித்திரவீரியனும் உன் தம்பி. அந்தப் பாசத்துக்காகவும், நம் வம்சத்துக்காகவும், மக்களுக்காகவும்...
..விசித்திர வீரியனின் மனைவிகளுக்குக் குழந்தைகளைக் கொடு.
வியாசர் கூறினார்:
களங்கமற்ற மனத்தோடு உன் உத்தரவை நிறைவேற்றுகிறேன்.
என் உடலின் மணத்தையும், தோற்றத்தையும் சடைமுடியையும் சகித்துக் கொண்டால் அவர்கள் ஆளுக்கொரு குழந்தையை அடைவார்கள்.


சத்யவதியின் தூண்டுதலின் பேரில் அம்பிகா தன் அறையில் முனிவரை வரவேற்றாள். ஆனால் அவரைக் கண்டு பயந்து கண்களை மூடிக் கொண்டாள்.
முனிவர் அவளுடன் இருக்கும் வரை அவள் கண்களை மூடிக் கொண்டேயிருந்தாள்.
சத்யவதி முனிவரிடம் வினவினாள்
அரசகுமாரிக்கு சிறந்த மகன் பிறப்பானா?
முனிவர் கூறினார்:
பத்தாயிரம் யானைகளின் பலம் கொண்ட மகன் பிறப்பான். அவனுக்கு நூறு பிள்ளைகள் பிறப்பார்கள். ஆனால்...
அவன் தாய் கண்களை மூடிக் கொண்டதினால் குருடனாகப் பிறப்பான்.
இதைக்கேட்டு சத்யவதி கதறினாள்.
குருடன் எப்படி மன்னனாக முடியும்? குரு வம்சத்துக்கு இன்னொரு அரசனைக் கொடு.


குருடனாக திருதராஷ்டிரன் பிறந்ததும், வியாசர் அம்பாலிகாவை அணுகினார். இளையவளான அவள் முனிவரைப் பார்த்துப் பயந்து உடல் வெளிறிப் போனாள். வியாசர் கூறினார்.
பயம் உன்னை வெளிறச் செய்து விட்டது. ஆகவே உன் மகன் வெண் தோலுடன் பிறப்பான். அவனுக்குப் பாண்டு என்று பெயரிடு.
இரு முயற்சியிலும் ஏமாற்றமடைந்த சத்யவதி, அம்பிகாவிற்கு இன்னொரு குழந்தை அருளுமாறு வேண்டினாள் ரிஷியை. ஆனால் அம்பிகா தன் சேடிக்குத் தன் உடைகளையணிவித்து ரிஷியிடம் அனுப்பினாள். சேடி ரிஷியை திருப்தியோடு ஏற்று மரியாதை செலுத்தினாள்.
முனிவர் திருப்தியுற்றுக் கூறினார்:
இனி நீ அடிமையில்லை. உனக்குப் பிறக்கும் மகன் மகா-விவேகியாக இருப்பான்.
குரு வம்சத்து வழித் தோன்றல்களான திருதராஷ்டிரன், பாண்டுவின் தம்பியாக, என் குரு வியாசர் பணிப்பெண்ணுக்கு அருளப் பிறந்தான் விதுரன்.


இந்தக் குழந்தைகளின் ஜனனத்-
தால் குருவின் நாட்டு மக்களும் க்ஷேம
மடைந்தது. நீதி தவறாத பீஷ்மரின் கீழ்
தேசத்தில் சுபிட்சமும் சமாதான-
மும் நிலவியது. வேறு நாடுகளி-
லிருந்து மக்கள் வந்து குடியேறி
ஜனத்தொகை பெருகியது.
திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் மூவரையும்
தன் மகன் போல் வளர்த்தார் பீஷ்மர். அறிவா-
ளிகளாகவும், வீரர்களாகவும் வளர்-
ந்து வாலிபர்களானார்கள்
திருதராஷ்டிரன் குருடனானதால்
தக்க வயது வந்ததும்
பாண்டு சிங்காதனம்
ஏறினான்.

ஒருநாள் பீஷ்மர் அன்பொழுகும் தொனியுடன் விதுரனிடம் கூறினார்.
நம் சந்ததியினை வளர்ச்சிக்குத் திட்டமிடும் தருணம் வந்துவிட்டது.
சிறந்த கன்னிகைகள் மூவர் உள்ளனர். மன்னன் சுபலனின் மகள், காந்தாரி, சூரா மன்னனின் மகள் குந்தி, சால்யனின் சகோதரி மாத்ரி.
நம் குலம் தழைக்க ராஜகுமாரர்களுக்கேற்ற மனைவிகளாக இருப்பார்கள் இவர்கள் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?
விதுரன் கூறினான்.
எங்களுக்குத் தாய், தந்தை, வழிகாட்டி சகலமும் நீங்கள்தான். உங்கள் முடிவே எங்கள் நலன்.
காந்தாரிக்கு நூறு குழந்தைகளைப் பெறும் வரத்தைச் சிவன் அளித்திருப்பதை அறிந்த பீஷ்மர் காலங்கடத்தாது காந்தார நாட்டு மன்னனுக்குத் தூதுவர்களை அனுப்பினார்.
மணமகன் குருடன் என்பதினால் முதலில் தயங்கிய சுபலன் பிறகு, குரு வம்சத்தோடு தொடர்பு என்பதினால் சம்மதித்தான்.

உண்மை அறிந்த காந்தாரி, தன் அன்பையும், மரியாதையையும் காட்டத் தன் கண்களைத் துணியால் மூடினாள்.
சுபலனின் மகன் சகுனி, தன் சகோதரியை அழைத்துக் கொண்டு குரு நாட்டுக்கு வந்தான்.
இங்கு அவள் மரியாதையுடன் வரவேற்கப்பட்டாள்.
பீஷ்மரின் திட்டப்படி திருதராஷ்டிரனுக்கும் காந்தாரிக்கும் கோலாகலமாகத் திருமணம் நடந்தது.
தன் சகோதரியை ஏராளமான சீர் வரிசைகளோடு அளித்து விட்டு சகுனி காந்தாரம் திரும்பினான்.
இப்படியாக திருதராஷ்டிரன் சுபலனின் மகளை மனைவியாக அடைந்தான்.


முனிவரே! யாதவ மன்-
னன் சூரனின் மகள் குந்தி
என்கிறீர்கள். ஆனால் என் முன்
னோர் அவள் குந்திபோஜ-
னின் மகள் என்று
கூறுவார்கள்.
சூரனுக்குத் தந்தை வழி உறவு
குந்திபோஜன். அவனுக்குக்
குழந்தைகளில்லை. ஆகவே
தன் மூத்த குழந்தை ப்ரீதாவை
குந்திபோஜனுக்குக் கொடுத்-
தான். அவர்கள் ப்ரீதாவுக்கு
குந்தி என்று பெயரிட்டனர்.


பூஜிக்கத் தகுந்த விருந்தாளிகளைக் கவனிப்பது குந்தியின் கடமை. ஒரு
சமயம் குந்தியின் உபசரணையில் மகிழ்ந்த
துர்வாச முனிவர்,
உனக்கு ஒரு மந்தி-
ரத்தை உபதேசிக்கிறேன்.
எந்தக் கடவுளை நினை-
த்து அதைக் கூறுகி-
றாயோ அவர் உனக்கு
ஒரு குழந்தையைக்
கொடுப்பார்.

தூர்வாசர் போனதும் ஆவல் மிகுந்த ராஜகுமாரியான குந்தி சூரியனை நினைத்து அதைக் கூறினாள்.
கவச குண்டலங்களோடு ஒரு குழந்தை பிறந்தது அவளுக்கு. இவனே பின்னால் கர்ணன் என்று உலகோரால் அழைக்கப்பட்டான்.
கன்னிப பருவத்தில் குழந்தைக்குத் தாயான குந்தி, உறவினர்களுக்குப் பயந்து, என்ன செய்வது என்று சிந்தித்தாள். முடிவில்...
குழந்தையை நதியில் மிதக்க விட்டாள். ராதையின் கணவனான சூதகுலத்தலைவனுக்குக் கிடைத்தது அந்தக் குழந்தை.
அவனும் அவன் மனைவியும் அதைத் தங்கள் குழந்தைபோல வளர்த்தனர். கவச குண்டலங்களோடு இருந்ததால் வசுசேனன் என்று பெயரிட்டனர்.

இதனிடையே குந்திபோஜன் பலதேச மன்னர்களுக்கும் அழைப்பு அனுப்பினான். குந்தியின் சுயம்வரத்துக்காக வருகை தந்த மன்னர்களில் சிறந்தவனான பாண்டுவைப் பார்த்தாள் குந்தி.

குருவம்சத் தோன்றலான பாண்டு, இன்னொரு இந்திரன் போல அமர்ந்திருந்த கம்பீரம் குந்தியைக் கவர்ந்தது. அவன் அருகே சென்று அவனுக்கு மாலை அணிவித்தாள்.

திருமணத்துக்குப் பின் குந்திபோஜன் தன் மாப்பிள்ளைக்கு ஏராளமான வெகுமதிகளை வழங்கினான். பாண்டு குந்தியுடன் அஸ்தினாபுரம் திரும்பினான்.





COMICS PDF TIMES

நம் இரு வமிசங்களும் பலத்திலும் அந்தஸ்திலும் சமமானவை. ஆகவே என் முடிவை ஏற்க விரும்புகிறேன்
இதற்கு மாத்ரா நாட்டு மன்னன்....
குரு வம்சத்தோரோடு சம்பந்தம் செய்வதில் விருப்பந்தான்...
ஆனால் மீற முடியாததோர் பழக்கத்தை எங்கள் குடும்பம் கடைப்பிடிக்கிறது...
ஆகவே இம்முறையில் நீங்கள் பெண் கேட்பது சரியல்ல.
இந்தக் காரணத்தினால் நான் உங்களுக்கு இது விஷயமாக உறுதி எதும் அளிப்பதற்கில்லை.
எல்லாமறிந்த பீஷ்மருக்கு பிரபலமான அந்தப் பழக்கம் தெரியாதது அல்ல. சிரித்தபடியே கூறினார்.
பழக்கத்தை மீற மாட்டேன்.

மாத்ரா வம்சத்து வழக்கப்படி சால்யனுக்கு, நினைக்க முடியாதபடி பொன், முத்து, நவரத்தினங்கள், பட்டாடைகள், யானைகள், குதிரைகள், ரதங்கள் - இப்படிக் குவித்தார் வரதட்சிணையாக. சால்யன் அவற்றை ஏற்று...
தன் சகோதரியை குரு வம்சத்தாரிடம் ஒப்படைத்தான்.
தனது குறிக்கோள் நிறைவேறிய திருப்தியோடு பீஷ்மர் அஸ்தினபுரம் திரும்பினார், மாத்ரியுடன்.
பிறகு ஒரு நல்ல முகூர்த்தத்தில மாத்ரியை பாண்டுவுக்கு மனைவியாக்கி வைத்தார்.


அடுத்த முப்பது நாட்கள் பாண்டு தன் மனைவிகளோடு குலவி மகிழ்ந்தான். பிறகு பெரும் படையுடன் திக்விஜயத்துக்குக் கிளம்பினான்.


முதலில் தஸ்ஹாரணர்களை அடக்கினான். பிறகு தீரர்களைத் தாக்கிக் கொன்றான். கர்வம் கொண்ட மகத நாட்டு மன்னனின் பொக்கிஷத்தைக் கொள்ளையடித்து, மிதிலையில் புகுந்து, விதேகர்களை வென்று, தன் படையை காசி, சுக்மா, புந்தரர்களுக்கு எதிராக நடத்தி தன் ஏகசக்ராதிபத்தியத்தை நிலைநாட்டினான்.
அஸ்தினாபுரம்
விதேகர்
காசி
மகதம்
புந்தரா
தஸ்ஹாரணர்கள்
சுஹ்மா


ஊழித் தீயைப் போல
அவன் பாணங்கள் தாக்-
கின. தன் ஆயுத பலத்தா-
லும் ஆற்றலாலும் எதிர்ப்
பட்ட எல்லா அரசர்களை-
யும் வென்று குரு வம்-
சத்தவருக்கு அடி
பணிய வைத்தான்.
பணிந்த மன்னர்கள் நவரத்தினங்களை-
யும், முத்து, பவழம், தங்கம், வெள்ளி,
பசு, குதிரை, யானை, தேர், ஒட்டகம்,
எருமை, ஆடு, விரிப்புக்கள், சால்வை-
கள், கம்பளிகளை பரிசுப் பொருளாகக்
கொண்டு வந்து குவித்தார்கள்.
அஸ்தினாபுரத்து அர-
சன் இவற்றை ஏற்-
றுக் கொண்டு தலை-
நகர் திரும்பினான்.



COMICS PDF TIMES

பீஷ்மரைக் கண்டதும் அவர்
பாதங்களில் பணிந்
தான் பாண்டு.
பாண்டுவைத் தழுவி ஆனந்தக் கண்ணீர்
வடித்தார்
பீஷ்மர்.
சங்கு முழங்க, முரசம் அதிர, கொம்புகள் குதூகலிக்-
க்க தலைநகருள் புகுந்தான் பாண்டு.
பிறகு திருதராஷ்டிரனின் ஆணைப்படி, தன் வீரத்தினால் சேகரித்த
செல்வங்களை பீஷ்மர், சத்யவதி, அம்பிகா, அம்பாலிகாவுக்கு
வழங்கினான் பாண்டு.

விதுரனுக்கும் ஒரு பகுதியை அனுப்பி வைத்-
தான். மன்னன் தேவகனுக்கும் ஒருகீழ்க்
குலப்பெண்ணுக்கும் பிறந்த அழகியை விது
ரனுக்கு மணமுடித்து வைத்தார் பீஷ்மர்.


இப்படித் தன் சபதத்திலிருந்து
வழுவாது தன் சகோதரர்-
களின் விதவை மனைவி-
களுக்குக் குழந்தைப்பேற்றை
அளித்து, அந்தக் குழந்தை-
களால் குருவம்சம் தழை-
த்தோங்கச் செய்தார்.
ஜனமேஜயனின் சர்ப்பசாத்ரா யாகத்-
தின் போது வைசம்பாயனர் கூறிய
வியாசரின் மகாபாரதத்தின்
இரண்டாவது பாகம்
முடிவுற்றது.

EDITED, PRINTED AND PUBLISHED BY DINESH V. PAI FOR POOMPATTA PUBLICATIONS
PRINTED AT PAICO PRINTING PRESS, PAICO OFFSET PRINTERS AND
POOMPATTA PUBLICATIONS—PRINTING DIVISION, COCHIN

அடுத்த

பூந்தளிர் அமர் சித்திரக்கதை

வங்கம் தந்த தங்கம்

ரவீந்திரநாத் தாகூர்

ஆகஸ்ட் 25ந் தேதி

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

செப்டம்பர்—10

மாபெரும் இதிகாசமான

மகாபாரதம் – 2

பீஷ்ம சபதம்

பூந்தளிர் அமர் சித்திரக்கதை

வரிசையில் உங்களை மகிழ்விக்க வருகிறது

விலை
ரூ. 1-50

ஏமாற்றத்தைத் தவிர்க்க
இன்றே உங்கள் ஊர் ஏஜன்டிடம்
பதிவு செய்து கொள்ளுங்கள்

 EDITED, PRINTED AND PUBLISHED BY DINESH V. PAI FOR POOMPATTA PUBLICATIONS